[1979 மார்ச் 14

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 773 ஆண்களும், 599 பெண்களும் அங்கே பணியாற்றுவதாகச் சொன்னார்கள். அவர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படுவதற்கு, தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு அரசு ஆலோசனை வழங்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம், ’1 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டபோது, ஒரு தனியாருடைய நிலத்தை எடுத்து மற்றவர்களுக்கு விநியோகம் செய்வதற்குப் பதிலாக நிறுவப்பட்ட ஒரு அமைப்புபோல் தெரிகிறது. ஆகவே, இந்தக் கரும்புப் பண்ணை தேவையா என்பதை இந்த அரசு பரிசீலிக்க இருக்கிறது.

அவினாசி வட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள் வசூல்

*வினா என், 382—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அவினாசி தாலுகா மங்கரசவளையபாளையம், தண்டுக்காரம்பாளையம், பழங்கரை, கைக்காட்டி புதூர் ஆகிய கிராமங்களில் கூட்டுறவு அதிகாரிகள் வண்டி, எருதுகள், சைக்கிள்கள் மற்றும் இதரபொருட்களை ஜப்தி செய்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மங்கரசவளையபாளையம், குமாரபாளையம், மற்றும் கைக்காட்டிபுதூர் கிராமங்களில் ஜப்தி நடவடிக்கைகள், 8-6-78 மேலும் 10-6-78 அன்றும் எடுக்கப்பட்டன.

(ஆ) திருவாளர்கள் கணபதியப்பக்கவுண்டர், பழனிச்சாமி, மாரப்பகவுண்டர் ஆகிய மூன்று பெரிய விவசாயிகள் வீடுகளில் உள்ள எருது, சைக்கிள், மாட்டுவண்டி, கடிகாரம், மேஜை முதலான பொருட்கள் ஜப்தி செய்யப்பட்டன. மூவரும் சிறிய விவசாயிகள் அல்ல.

திரு. சொ ந. பழனிசாமி: கூட்டுறவுக் கடன்களை வசூலிக்க முற்படும் அரசு ஊழியர்கள் விவசாயிகளைத் துன்புறுத்துகிறார்கள் என்பதை அரசு அறியுமா? வெள்ளம்,

1979 மார்ச் 14]

புயல் போன்ற இயற்கை உற்பாதங்கள் ஏற்படும்போது விவசாயிகள் தவிர மற்றத் துறையில் இருப்பவர்கள் நிவாரண உதவிகள் பெற முடிகிறது. விவசாயிகளுக்கு இந்த உற்பாதங்களால் ஏற்பட்ட சங்கடங்களை நிவர்த்தி செய்யும் வகையில் 1977-78-ம் ஆண்டு வரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை வஜா செய்யவும் அதற்குப் பிறகு வாங்கிய கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றவும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 16-12-78-ம் நாளில் இருந்து எந்த விவசாயிகளின் மீதும் ஜப்தி நடவடிக்கை கூடாது என்றும் இந்நிலை இன்று வரை தொடருகிறது என்றும் விவசாயிகள் உச்ச மட்டக்குழு பரிந்துரை வரும் வரை ஜப்தி நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளாது என்றும் உங்கள் மூலம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கான்சாபுரத்திலுள்ள கூட்டுறவு நாணய சங்கம்

*வினா எண் 383—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி கான்சாபுரம் பஞ்சாயத்து மன்ற பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடைபெற்றுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) முகவை மாவட்டத்தைச் சேர்ந்த திருவில்லிபுத்தூர் தொகுதி கான்சாபுரம் பஞ்சாயத்து மன்றப் பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடை பெற்றுள்ளது உண்மை.

(ஆ) இது பற்றி காவல் துறையின் ஒரு முழுமையான புலனாய்வுக்கு அனுப்பப்படவிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தலைவர் ஒரு வக்கீலாக இருக்கிறார். இவர் கையாடல் பண்ணியிருக்கிறார். கூட்டுறவு அதிகாரிகள் நான்கு வருஷங்களுக்கு முன்னால் ஒப்புதல் கொடுத்து முறைப்படி ஏ. பி. பி. அனுமதி வழங்கி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்